# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
# இந்திய வானிலைத் துறை
## வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை
## திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (29.06.2024 முதல் 03.07.2024)

**அறிக்கை எண் 052/2024** **தேதி.28.06.2024**

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 15°செ முதல் 19°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 12°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் பரவலாக மழை பெறப்பட்டது.

### திருப்பூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

திருப்பூர் மாவட்டத்தின் 25.06.24 முதல் 27.06.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 29°செ முதல் 33°செ ஆகவும் இரவுநேரவெப்பநிலை 22°C to 23°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 88 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 19-24 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

### திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (25.06.2024 முதல் 27.06.2024) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 03.07.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 25/06 | 26/06 | 27/06 | தேதி | நாள்-1 29/06 | நாள்-2 30/06 | நாள்-3 01/07 | நாள்-4 02/07 | நாள்-5 03/07 |
| 0.1 | 1.7 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 4 | 5 | 8 |
| 33 | 31 | 29 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 36 | 37 | 36 | 35 | 34 |
| 22 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 26 | 26 | 25 | 25 | 24 |
| 7 | 8 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 7 | 7 | 8 | 8 |
| 87 | 88 | 82 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 80 | 84 | 85 | குறைந்தபட்சகாற்றின் ஈரப்பதம் (%) | 40 | 40 | 40 | 40 | 40 |
| 21 | 24 | 19 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 20 | 24 | 22 | 20 | 26 |
| 230 | 250 | 250 | காற்று வீசும் திசை | 250 | 250 | 250 | 250 | 250 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (29.06.2024 முதல் 03.07.2024)

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 01.07.24, 02.07.24, 03.07.24 ஆகிய நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்சவெப்பநிலை 34°செ முதல் 37°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°செ முதல் 26°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது

சராசரியாக காற்று மணிக்கு **20-26** கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ளஅடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அவினாசி | தாராபுரம் | குடிமங்கலம் | காங்கேயம் | குண்டடம் | மடத்துக்குளம் | மூலனூர் | பல்லடம் | பொங்கலூர் | திருப்பூர் | உடுமலைப்பேட் | ஊத்துக்குளி | வெள்ளக்கோவில் |
| **29-06-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **30-06-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **01-07-2024** | 1.0 | 2.0 | 1.0 | 1.0 | 1.0 | 2.0 | 2.0 | 1.0 | 1.0 | 1.0 | 2.0 | 1.0 | 1.0 |
| **02-07-2024** | 2.0 | 3.0 | 2.0 | 2.0 | 2.0 | 3.0 | 3.0 | 2.0 | 2.0 | 2.0 | 3.0 | 2.0 | 2.0 |
| **03-07-2024** | 4.0 | 2.0 | 2.0 | 3.0 | 3.0 | 2.0 | 2.0 | 4.0 | 4.0 | 5.0 | 2.0 | 4.0 | 1.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | வரும் 5 நாட்களில் மேற்கு மண்டலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் தூறல் (அ) லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. மேற்குதொடர்ச்சி மழையினை ஒட்டியுள்ள பகுதிகளில் மிதமானமழை எதிர்பார்க்கப்படுகிறது. காற்றின் வேகமானது மணிக்கு 10 - 26 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது.<br>மண் ஈரத்தினை பொறுத்து இறவைப் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் மேற்கொள்ளவும்.<br>மருந்து தெளிப்பினை காலை நேரங்களிலோ (அ) 3-4 மணிநேரம் மழையில்லாத வானிலை எதிர்பார்க்கப்படும்போது மட்டும் மேற்கொள்ளலாம். |
| மக்காசோளம் | **விதைப்பு** | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி இறவையில் மக்காச்சோளத்தினை விதைக்கும் முன் இமிடாகுளோபிரிட் மருந்தினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்து பின் விதைக்கவும்.<br>மக்காச்சோளம் விதைத்த மூன்று நாட்களுக்குள் அட்ரசின் என்ற முளைக்குமுன் தெளிக்கும் களைக்கொல்லியினை ஏக்கருக்கு 400 கிராம் அளவில் 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும். |
| கரும்பு | வளர்பருவம் | உள்ளூர் பகுதிகளில் அதிவேகக் காற்று மற்றும் லேசான மழை பொழிய வாய்ப்புள்ளது, எனவே கரும்பில் எதிரெதிர் வரிசைகளை விட்டம் கட்டி காற்றினால் சாயமல் பாதுகாக்கவும்.<br>கரும்பில் குருத்து பகுதியில் மாவுப்பூச்சி தென்படின் இமிடாகுளோபிரிட் 17.8 % SL @ 0.3 மில்லி / லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |

| | | |
|---|---|---|
| தென்னை | | தென்மேற்கு பருவமழை துவங்கி இருப்பதால் மரம் நடவு செய்ய விரும்பும் விவசாயிகள் தக்க ஆயத்த பணிகளை மேற்கொள்ளவும். மேலும் தென்னைக்கு உரமிட மரத்தைச்சுற்றி 1.8 மீட்டர் தள்ளி அரைவட்ட வடிவில் குழி எடுக்கவும்.<br>தென்னை மரத்தோப்பில் கிடைக்கும் மழையினை சேமிக்கும் வகையில் வட்டபாத்தி அமைக்கவும். மேலும் 5 வயதிற்கு மேலுள்ள ஒரு மரத்திற்கு 650 கிராம் யூரியா, 1 கிலோ சூப்பர் பாஸ்பேட், 1 கிலோ பொட்டாஸ் கலந்து உரமிடவும். மேலும் ஒரு மரத்திற்கு நுண்ணுட்ட சத்துகலவை 250 கிராம் அளவில் மண்ணின் மேற்பரப்பில் இடவும். |
| கால்நடைகள் | | காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் கோழிகளின் தீவனங்கள் சிதற வாய்ப்புள்ளது. எனவே காற்றின் வேகத்தை குறைக்க கோழிக்கூடரங்களில் சுற்றிலும் சாக்கு பைகளை தொங்கவிடவும்.<br>காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால் கோழிகளின் தண்ணீர் தேவை அதிகமாக இருக்கும் குறிப்பாக கறிக்கோழிகளுக்கு அதிகமாக தேவைப்படும்.. ஏனவே அதற்கு தகுந்தாற்போல் நல்ல போதுமான அளவு தண்ணீரை கொடுப்பதன் மூலம் உரிய எடையுடன் பராமரிக்கலாம்.<br>வேகமான காற்றினால் கால்நடைகளுக்கு ஏற்படும் நாவறட்சினைப்போக்க கால்நடைகளுக்கு போதிய குளிர்ந்த நீர் அளிக்கவும்.<br>எதிர்பார்க்கப்படும் காற்றின் அதிக ஈரப்பதத்தின் காரணமாக பால் மாடுகளில் பால் கறப்பதற்கு முன்பும் கறந்த பின்பும் மடுவினை பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலை கொண்டு கழுவி மடுவீக்க நோய் வராமல் தவிர்க்கவும். |

## குறுஞ்செய்தி

- எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி மக்காச்சோளத்தினை விதைக்கும் முன் ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் இமிடாகுளோபிரிட் மருந்தினை பயன்படுத்தி விதை நேர்த்தி செய்து பின் விதைக்கவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**